# வரலாறு

# மேல்நிலை இரண்டாம் ஆண்டு

## மாதிரி வினாத்தாள்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக,

காலம் 3 மணி — மதிப்பெண் 200

பகுதி அ

அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்
அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

I. சரியான விடையைத் தேர்வு செய்க — 45 x 1 = 45

1. வாரன் ஹேஸ்டிங்சைத் தொடர்ந்து தலைமை ஆளுநர் ஆனவர்

   அ. காரன் வாலிசு — ஆ. இராபர்ட் கிளைவ்

   இ. சர் ஜான் மக்பர்சன் — ஈ. வெல்லெஸ்லி பிரபு

2. வங்காள ஆசியக் கழகம் நிறுவியவர்

   அ. காரன் வாலிசு — பெண்டிங் பிரபு

   இ. கர்சன் பிரபு — ஈ. வாரன் ஹேஸ்டிங்

3. டல்ஹௌசி பிரபுவின் விரிவாக்கக் கொள்கை இவ்வாறு அழைக்கப்பெறுகிறது.

   அ. நிலைத்த நிலவரித் திட்டம் — ஆ. வாரிசிழப்புக் கொள்கை

   இ. நீலநீர் கொள்கை — ஈ. தனிமைப்படுத்தும் கொள்கை

4. கரீம்கான் என்பவர்

   அ. பிண்டாரி — ஆ. நேபாள அரசர்

   இ. தக்கர் — ஈ. அயோத்தி அரசர்

5. மருது உடன்பிறப்புக்கள் தூக்கிலிடப்பட்ட ஊர்

   அ. சிவகங்கை — ஆ. காளையார் கோவில்

   இ. கயத்தாறு — ஈ. திருப்பத்தூர்

6. சபர்மதி ஆசிரமம் நிறுவியவர்

   அ. சர்தார் வல்லபாய் பட்டேல் — ஆ. மகாத்மா காந்தி

   இ. மோதிலால் நேரு — ஈ. வினோபா பாவே

7. வங்காளக் குடியுரிமைச் சட்டம் நிறைவேறிய ஆண்டு

   அ. 1885 — ஆ. 1886

   இ. 1887 — ஈ. 1900

8. காந்தி வட்டமேஜை மாநாட்டில் கலந்துகொண்ட ஆண்டு

   அ. 1930 — ஆ. 1931

   இ. 1932 — ஈ. 1933

9. காவேரி உடன்பாடு மைசூருடன் மேற்கொண்ட ஆண்டு

   அ. 1924 — ஆ. 1925

   இ. 1930 — ஈ. 1969

10. சுய மரியாதை இயக்கம் நிறுவியவர்

அ. இராஜாஜி　　　ஆ. திரு. வி. க

இ. காமராஜ்　　　ஈ. பெரியார் ஈ.வெ.ரா.

11. 1907 ஆம் ஆண்டு சூரத் காங்கிரசு மாநாட்டிற்குத் தலைமை வகித்தமிதவாதத் தலைவர்

அ. சுரேந்திர நாத் பானர்ஜி　　　ஆ. கோபாலகிருஷ்ண் கோகலே

இ. விஜயராகவாச்சாரி　　　ஈ. ராஜ் பிகாரி கோஷ்

12. நீதிக்கட்சியின் முதல் தலைமை அமைச்சர்

அ. சுப்பராயலு ரெட்டியார்　　　ஆ. சர் தியாகராயர்

இ. பொப்பிலி அரசர்　　　ஈ. பி.டி. இராசன்

13. சென்னை சுதேசிச் சங்கத்தை நிறுவியவர்

அ. காசுல்லா லட்சுமி நரசு ரெட்டி　　　ஆ. ஜி. சுப்பிரமணிய ஐயர்

இ. எம். விஜயராகவாச்சாரி　　　ஈ. மகாகவி பாரதி

14. வைக்கம் வீரர் என்று அழைக்கப்பெற்ற தலைவர்

அ. கு.காமராஜ்　　　ஆ. இராஜாஜி

இ. வரதராஜுலு நாயுடு　　　ஈ. பெரியார் ஈ.வெ.ரா

15. இந்தியாவில் நெருக்கடி நிலையை நடைமுறைப் படுத்திய தலைமை அமைச்சர்

அ. வாஜ்பாயி　　　ஆ. திருமதி இந்திரா காந்தி

இ. இராஜிவ் காந்தி　　　ஈ. மொரார்ஜி தேசாய்

16. எலியாஸ் ஹோவே கண்டறிந்த கருவி

அ. தையல் பொறி　　　ஆ. பருத்திநூல்நூற்கும் கருவி

இ. இயந்திரத்தறி　　　ஈ. டிரில்

17. பன்னாட்டுச் சங்கம் நிறுவிட அடித்தளம் அமைத்தவர்

அ. தியோடர் ரூஸ்வெல்ட்　　　ஆ. ஜார்ஜ் வாஷிங்டன்

இ. உட்ரோ வில்சன்　　　ஈ. ட்ரூமன்

18. இரஷ்ய - ஜப்பானியர் போர் முடிந்த ஆண்டு

அ. 1904　　　ஆ. 1905

இ. 1906　　　ஈ. 1910

19. சமூக ஒப்பந்தம் என்ற நூலின் ஆசிரியர்

அ. ரூசோ　　　ஆ. டர்காட்

இ. வால்டேர்　　　ஈ. மாண்டேஸ்கியூ

20. இட்லர் - மியூனிச் ஒப்பந்தத்தை மீறிய ஆண்டு

அ. 1937　　　ஆ. 1938

இ. 1939　　　ஈ. 1940

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக

21. நந்தகுமார் நிகழ்ச்சியின் போது தலைமை ஆளுநர் பொறுப்பு வகித்தவர் ___________.

22. முதல் ஆப்கானியப்போரின் போது தலைமை ஆளுநர் பொறுப்பு வகித்தவர் __________.

23. வேலூர் புரட்சியின் போது சென்னை மாநில ஆளுநர் ___________.

24. அரசியின் பேரறிக்கை வெளியான ஆண்டு ___________.

25. கர்சன பிரபு நியமித்த இரயில்வே விசாரணைக் குழுத் தலைவர் __________.

26. ஸ்ரீ நாராயண குரு நிறுவிய அமைப்பு _________.

27. முடிசூடும் பெருமாள் எனும் பெயருடையவர் ____________.

28. சாரே ஜஹான் சே அச்சா எனும் நாட்டுப்பற்றுப் பாடலை எழுதியவர் __________.

29. இரஷ்யப்புரட்சிக்குக் காரணமான இரஷ்ய சார் __________.

30. பெனிட்டோமுசோலினி நிறுவிய கட்சி ____________.

பொருத்துக வினாக்கள்

31. பகுதியுடன் ஆ பகுதியைப் பொருத்துக

| அ | ஆ |
|---|---|
| அ. ஹபீஸ் ரஹ்மத்கான் | 1. வங்காள அலுவலர் |
| ஆ. மாதவராவ் | 2. வாரணாசி |
| இ. செயித் சிங் | 3. மராத்தியர் |
| ஈ. நந்தகுமார் | 4. ரோஹில்லாப்போர் |

சரியான விடையைத் தேர்வு செய்க

a. அ ஆ இ ஈ — 1 4 3 2

b. அ ஆ இ ஈ — 3 4 2 1

c. அ ஆ இ ஈ — 4 3 2 1

d. அ ஆ இ ஈ — 4 3 1 2

32. அ பகுதியுடன் ஆ பகுதியைப் பொருத்துக

| அ | ஆ |
|---|---|
| அ. சம்பரண் அறப்போர் | 1. 1919 |
| ஆ. ஜாலியன்வாலாபாக் | 2. 1922 |
| இ. ஒத்துழையாமை இயக்கம் | 3. 1917 |
| ஈ. சௌரி சௌரா | 4. 1921 |

சரியான விடையைத் தேர்வு செய்க

a. அ ஆ இ ஈ — 3 1 4 2

b. அ ஆ இ ஈ — 3 1 2 4

c. அ ஆ இ ஈ — 3 2 1 4

d. அ ஆ இ ஈ — 1 4 3 2

33. அ பகுதியுடன் ஆ பகுதியைப் பொருத்துக.

| அ | ஆ |
|---|---|
| அ. டாக்டர் சுப்பராயன் அமைச்சரவை | 1. 1923 |
| ஆ. சர். பி.டி. இராசன் அமைச்சரவை | 2. 1920 |
| இ. ஏ. சுப்பராயலு அமைச்சரவை | 3. 1936 |
| ஈ. பனகல் அரசர் அமைச்சரவை | 4. 1926 |

சரியான விடையைத் தேர்வு செய்க

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| a. | அ | ஆ | இ | ஈ | b. அ | ஆ | இ | ஈ |
| | 2 | 3 | 4 | 1 | 4 | 3 | 2 | 1 |
| c. | அ | ஆ | இ | ஈ | d. அ | ஆ | இ | ஈ |
| | 3 | 4 | 2 | 1 | 4 | 2 | 3 | 1 |

பகுதியுடன் ஆ பகுதியைப் பொருத்துக

| அ | ஆ |
|---|---|
| அ. பில்கிரிம் பாதர்ஸ் | 1. ஆஸ்திரேலியா |
| ஆ. கேப்டன் குக் | 2. மசாகுசெட்ஸ் |
| இ. ஆங்கிலேயக் கூட்டு வணிக நிறுவனம் | 3. நியூபவுண்ட்லாண்டு |
| ஈ. ஜான் காபெட் | 4. வர்ஜீனியா |

சரியான விடையைத் தேர்வு செய்க

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| a. | அ | ஆ | இ | ஈ | b. அ | ஆ | இ | ஈ |
| | 4 | 2 | 1 | 3 | 2 | 1 | 4 | 3 |
| c. | அ | ஆ | இ | ஈ | d. அ | ஆ | இ | ஈ |
| | 2 | 4 | 1 | 3 | 4 | 1 | 3 | 2 |

35. அ பகுதியுடன் ஆ பகுதியைப் பொருத்துக

| அ | ஆ |
|---|---|
| அ. மெயின்காம்ப் | 1. காரல் மார்க்ஸ் |
| ஆ. தாஸ் கேபிடல் | 2. இட்லர் |
| இ. அவந்தி | 3. ரூசோ |
| ஈ. தி சோஷியல் கான்டிராக்ட் | 4. முசோலினி |

சரியான விடையைத் தேர்வு செய்க

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| a. | அ | ஆ | இ | ஈ | b. அ | ஆ | இ | ஈ |
| | 2 | 3 | 4 | 1 | 3 | 2 | 4 | 1 |
| c. | அ | ஆ | இ | ஈ | d. அ | ஆ | இ | ஈ |
| | 2 | 1 | 4 | 3 | 3 | 1 | 4 | 2 |

**IV.** சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது

36. அ. இராமச்சந்திர பாண்டுரங்கன் இராணி லட்சுமி பாயின் தனி உதவியாளர்

ஆ. இராணி லட்சுமி பாய் ஜான்சியின் அரசி

இ. நானா சாகிபு திபேத்தில் சரண் அடைந்தார்.

ஈ. மொகலாய மன்னர் சிராஜீத்தினின் இயற்பெயர் இரண்டாம் அக்பர்.

37. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ. டப்பரின் பிரபு சிறந்த அரச தந்திரி

ஆ. டப்பரின் பிரபுவின் அரசப்பிரதிநிதிக் காலத்தில் இரண்டாம் பர்மியப் போர் நடைபெற்றது.

இ. லேண்ஸ்டவுன் பிரபுவிற்குப் பின் டப்பரின் பிரபு பதவியேற்றார்.

ஈ. டப்பரின் பிரபுவின் ஆட்சிக் காலத்தில் சென்னை குடியுரிமைச் சட்டம் நிறைவேறியது.

V. துணிபு, காரணம் வகை வினாக்கள்

41. துணிபு : மூன்றாம் மைசூர்ப் போரினைக் காரன்வாலிசு நிகழ்த்தினார்.

காரணம் : பிரிட்டானியர்களின் நட்பிற்குரிய திருவாங்கூர் அரசரைத் திப்பு சுல்தான் தாக்கினார்.

விடை கண்டறிக.

அ. துணிபும் காரணமும் சரியானவை. காரணம் துணிபுக்குச் சரியான விளக்கமாகும்.

ஆ. துணிபும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் துணிபுக்குச் சரியான விளக்கமன்று

இ. துணிபு சரியானது. காரணம் தவறானது.

ஈ. காரணம் சரியானது. துணிபு தவறானது.

42. துணிபு : வெல்லெஸ்லி பிரபுவின் பெருந்திட்டங்களில் ஒன்று துணைப் படைத்திட்டத்தினைப் பயன்படுத்தியது ஆகும்.

காரணம் : ஆங்கிலேய நிறுவனத்தைத் தலையான ஆற்றலாக மாற்றக்கூடிய கொள்கையை வெல்லெஸ்லி பின்பற்றினார்.

விடை கண்டறிக.

அ. துணிபும் காரணமும் சரியானவை. காரணம் துணிபுக்குச் சரியான விளக்கமாகும்.

ஆ. துணிபும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் துணிபுக்கு சரியான விளக்கமன்று.

இ. துணிபு சரியானது காரணம் தவறானது.

ஈ. காரணம் சரியானது. துணிபு தவறானது.

43. துணிபு : ஒழுங்குமுறைச் சட்டத்தைத் திருத்தும் நடவடிக்கையாக 1784ல் பிட் இந்தியச் சட்டம் வெளியானது.

காரணம் : ஒழுங்குமுறைச் சட்டத்தின் விதிமுறைகள் தலைமை ஆளுநருக்கு இடையூறை ஏற்படுத்தின.

விடை கண்டறிக.

அ. துணிபும் காரணமும் சரியானவை. காரணம் துணிபுக்குச் சரியான விளக்கமாகும்.

ஆ. துணிபும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் துணிபுக்கு சரியான விளக்கமன்று.

இ. துணிபு சரியானது காரணம் தவறானது.

ஈ. காரணம் சரியானது. துணிபு தவறானது.

44. துணிபு : ஒவ்வொர் ஆண்டும் காங்கிரசு விடுதலைத் தீர்மானத்தை நிறைவேற்றினாலும் ஆங்கிலேய அரசு அதனை மறுத்தது.

காரணம் : ஆங்கிலேய அரசு காங்கிரசின் தீர்மானத்தை ஏற்காதது காங்கிரசு இயக்கத்தவரிடையே ஏமாற்ற உணர்வை ஏற்படுத்தியது.

விடை கண்டறிக.

அ. துணிபும் காரணமும் சரியானவை. காரணம் துணிபுக்குச் சரியான விளக்கமாகும்.

ஆ. துணிபும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் துணிபுக்கு சரியான விளக்கமன்று.

இ. துணிபு சரியானது காரணம் தவறானது.

ஈ. காரணம் சரியானது. துணிபு தவறானது.

45. துணிபு : நீராவிக்கு மாற்றாக வந்த மின் ஆற்றல் தொழில்துறையில் புரட்சியை ஏற்படுத்தியது.

காரணம் : நாளடைவில் மின் ஆற்றல் இல்லப்பணிகளுக்கும் பயன்பட்டது.

விடை கண்டறிக.

அ. துணிபும் காரணமும் சரியானவை. காரணம் துணிபுக்குச் சரியான விளக்கமாகும்.

ஆ. துணிபும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் துணிபுக்கு சரியான விளக்கமன்று.

இ. துணிபு சரியானது காரணம் தவறானது.

ஈ. காரணம் சரியானது. துணிபு தவறானது.

பகுதி ஆ

ஏதேனும் பதினைந்திற்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்

ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று குறிப்புகள் அளித்தல் வேண்டும்.

ஒவ்வொரு குறிப்பிற்கும் ஒரு மதிப்பெண்

மூன்று குறிப்புகள் தரும் வகை வினாக்கள் **15 x 3 = 45**

46. ரோஹில்லாக்கள்
47. சதார் நிசாமத் அதாலத்
48. மிசல்கள்
49. சர் ஷான் ஷோர்
50. புலித்தேவர்
51. ஊமைத்துரை
52. ஆக்லாண்டின் ஆப்கானியக் கொள்கை
53. பஞ்சாப் நில ஒதுக்கீட்டுச் சட்டம்
54. கர்சனின் பஞ்சத் துயர் துடைப்புக் கொள்கை
55. சுத்த சன்மார்க்க இயக்கம்
56. நாராயணகுரு
57. நிழல் தங்கல்கள்
58. நீல்சிலை அகற்றும் போராட்டம்
59. வேதாரண்யம் உப்பு அறப்போர்
60. மாலுமி ஹென்றி
61. இயேசு சபை

62 ரூசோ

63. சிரோஜிவோ நிகழ்ச்சி
64. ஹிரோஷிமா, நாகசாகி
65. ஐ.நா. பாதுகாப்பு அவை

பகுதி இ

ஏதேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் (கட்டாய வினா உள்ளிட்டது)

அனைத்து வினாக்களுக்கும் சமமதிப்பெண்கள்

ஒவ்வொரு வினாவிற்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

(கடைசி வினாவிற்குக் கட்டாயமாக விடை அளிக்க வேண்டும்) (வினா எண் 77)

**10 x 6 = 60**

66. அ. வாரன்ஹேஸ்டிங்ஸ் மீது குற்ற விசாரணைக் காரணங்களை விளக்குக.

அல்லது

ஆ. வாரன்ஹேஸ்டிங்சின் சீர்திருத்தங்களை விளக்குக.

67. அ. சிந்து எவ்வாறு இணைக்கப்பெற்றது என ஆராய்க.

அல்லது

ஆ. ஹார்டிஞ்சின் சீர்திருத்தங்களை எழுதுக.

68. அ. வேலூர் புரட்சியின் விளைவுகளை எழுதுக.

அல்லது

ஆ. விடுதலைப் போரில் மருது உடன்பிறப்புகளின் பங்கினை விளக்கு.

69. அ. சமூக சீர்திருத்தத்திற்குப் பிரம்ம சமாஜம் ஆற்றிய பங்கினை மதிப்பிடுக.

அல்லது

ஆ. அலிகார் இயக்கம் பற்றி எழுதுக.

70. 1940 ஆம் ஆண்டு தனிநபர் அறப்போரினை விளக்குக.

அல்லது

ஆ. சுதேசி கப்பல் நிறுவனம் குறித்து நீவிர் அறிந்தவை யாவை?

71. அ. 1861 ஆம் ஆண்டு இந்திய மன்றச்சட்டம் குறித்து எழுதுக.

அல்லது

ஆ. 1892 ஆம் ஆண்டு இந்திய மன்றச் சட்டம் குறித்து எழுதுக.

72. அ. இந்திய விடுதலைச்சட்டம் குறித்து எழுதுகு.

அல்லது

ஆ. 1964 முதல் 1966 வரை இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளை விளக்குக.

73. அ. நேருவின் உள்நாட்டுக் கொள்கைகளை விளக்கு.

அல்லது

ஆ. காஷ்மீர் பிரச்சனை குறித்து எழுதுக.

74. அ. 1984 ஆம் ஆண்டு போபால் நச்சு வாயுக்கசிவு விபத்துக் குறித்து விளக்குக.

அல்லது

ஆ. இராஜிவ் காந்தியின் புதிய கல்விக் கொள்கையைக் குறித்து விளக்கு.

75. அ. மார்ட்டின் லூதர் பற்றி எழுதுக.

அல்லது

ஆ. பாவமன்னிப்புச் சீட்டுக் குறித்து எழுதுக.

76. அ. இங்கிலாந்தில் ஏன் தொழில்புரட்சி ஏற்பட்டதென விளக்குக.

அல்லது

ஆ. முதல் உலகப்போரில் அமெரிக்கா நுழைந்த சூழலை விளக்குக.

77. அ சீனப் பண்பாட்டுப் புரட்சி குறித்து விளக்குக.

அல்லது

ஆ. உலகமயமாக்கல் எனும் சொற்கூறை விளக்குக.

பகுதி ஈ

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக

(கட்டாய வினா உள்ளிட்ட அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்)

ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

(கடைசி வினாவிற்குக் கட்டாயமாக விடை தருதல் வேண்டும் வினா எண் 84)

5 x 10 = 50

78. அ. டல்ஹௌசியின் தலைமை ஆளுநர் பதவிக் காலம் குறித்து எழுதுக.

அல்லது

ஆ. 1857 ஆம் ஆண்டு ஆண்டுப்புரட்சியின் காரணம், விளைவுகளை விளக்குக.

79. அ. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தென் இந்தியச் சமூக, சமய சீர்திருத்தங்களை ஆராய்க.

அல்லது

ஆ. விடுதலைப் போரில் அண்ணல் காந்தியின் பங்கினை விளக்குக.

80. அ. 1947 முதல் 1964 வரை இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளை விளக்குக.

அல்லது

ஆ. 1964 முதல் 1984 வரை இந்தியா - சீனா. இந்தியா - பாகிஸ்தான் உறவுகளை ஆராய்க.

81. அ. மறுமலர்ச்சி இயக்கம் குறித்துக் கட்டுரை வரைக.

அல்லது

ஆ. பிரெஞ்சுப் புரட்சியின் காரணம். விளைவுகளை விளக்குக.

82. அ. இரண்டாம் உலகப்போருக்கான காரணங்களை ஆராய்க.

அல்லது

ஆ. ஐ.நாவின் அமைப்பு. செயல்களை விளக்குக.

83. அ. 1949க்குப் பின் சீனாவின் எழுச்சியை விளக்குக.

அல்லது

ஆ. கெடுபிடிப்போர் என்பது குறித்து விளக்குக.

84. அ. வெல்லெஸ்லியின் கீழ் ஆங்கிலேயர் இருப்பிடங்களைச் சுட்டிக் காட்டுக.

ஆ. வரைபடத்தில் கீழ்கண்ட ஐந்து இடங்களை குறிக்கவும்

1. ஜோத்பூர் 2. பரோடா 3. மும்பை 4. மசூலிப்பட்டினம் 5. தஞ்சாவூர்

அல்லது

ஆ. 1920 முதல் 1947 வரை நடைபெற்ற விடுதலைப் போர் நிகழ்ச்சிகள் ஐந்தினைக் காலக்கோடு காட்டி வரைக.

அல்லது

முதல் உலகப்போரின் போது நிகழ்ந்த ஐந்து முதன்மை நிகழ்ச்சிகளைக் காலக்கோடு காட்டி வரைக.